**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 44** **நாள்: 28.03.2018**

## மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு சிறப்பு பயிற்சி அளித்திட சிறப்பாசிரியர்கள் தேர்வு நடைபெற உள்ளது

சென்னை மாவட்டம், அனைவருக்கும் கல்வி இயக்கம், மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கான உள்ளடக்கிய கல்வித் திட்டம், மாற்றுத்திறனுடைய குழந்தைகளுக்கு சிறப்பு பயிற்சியளிப்பதற்காக முற்றிலும் தற்காலிகமாக மாதம் ஒன்றிக்கு ரூ.16,000/– மதிப்பூதியம் அடிப்படையில் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் (SMC) வாயிலாக 3 சிறப்பாசிரியர்கள் தெரிவு செய்யப்பட உள்ளனர்.

எனவே, கீழ்க்காணும் தகுதியுடைய விண்ணப்பதாரர்கள் 04.04.2018–க்குள் முழு விவரங்களுடன் (கல்வித்தகுதி மற்றும் அனுபவச் சான்றிதழ் நகல்களுடன்) கூடுதல் முதன்மைக் கல்வி அலுவலர், அனைவருக்கும் கல்வி இயக்கம், சென்னை மாவட்டம், மாநில மகளிர் மேல்நிலைப்பள்ளி வளாகம், எழும்பூர் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**<u>கல்வித்தகுதி</u>**

1. Any degree with M.Ed., (Special Education in any category)
2. Any degree with B.Ed., (Special Education in any Category)
3. Any degree with 2 year Diploma (Special Education in any Category) என்ற கல்வித் தகுதி பெற்றிருக்க வேண்டும்.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**